குடியியற் கல்வி

சுயகற்றல் கையேடு

தரம் - 06



தயாரிப்பு – M.H.M முஸ்தன்ஸிர்
ஸாஹிரா கல்லூரி கல்முனை
(தேசிய பாடசாலை)

வலயக் கல்வி அலுவலகம் - கல்முனை

www.ikedu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

01 எமது பாடசாலை

1) **பாடசாலையினால் ஆற்றப்படும் பணிகளைத் தருக.**
   - ✓ சிறந்த நற்பண்புமிக்க, ஒழுக்கமுடைய, நற்குணமுடைய நற்பிரசைகளை உருவாக்குதல்
   - ✓ பாடசாலையானது தனி மனிதனின் விருத்திக்கு மட்டுமன்றி சமூக விருத்திக்கும் பங்களிப்புச் செய்கின்றது.
   - ✓ சமூக அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றைக் கொண்ட செயற்றிறன் மிக்கவர்களை உருவாக்குதல்

2) **பாடசாலையின் வரலாறு என்றால் என்ன?**
   - ✓ பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இன்று வரை காணப்படும் மாற்றங்கள் பற்றிய தகவல்களாகும்



3) **மூலாதாரம் என்றால் என்ன?**
   - ✓ வரலாறு பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்குப் பயன்படுகின்ற எல்லாவற்றையும் மூலாதாரம் என்று சொல்வோம்

4) **பாடசாலையின் வரலாறு பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ள பயன்படும் மூலாதாரங்களைத் தருக.**
   - ✓ பாடசாலையில் பல இடங்களில் காணப்படும் நினைவுப் பலகைகள் கிராமத்தின் அல்லது, நகரத்தின் நூலகங்களில் இருக்கும் புராதான நூல்கள், ஆவணங்கள், படங்கள் மற்றும் புகைப்படங்கள்
   - ✓ ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய தகவல்கள்
   - ✓ பாடசாலையில் பயன்படுத்துப்படும் ஆவணங்கள் பாடசாலைச் சம்பவதிரட்டுப் புத்தகம் (Logbook) மாணவர் சேர்வு இடாப்பு புள்ளிவிபர அறிக்கைகளிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள்
   - ✓ சமயத் தலைவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள்
   - ✓ பழைய மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய தகவல்கள்

5) **பாடசாலையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு மாதிரி என்றால் என்ன?**
   - ✓ பாடசாலையின் நிருவாகம், அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பன ஒழுங்கமைக்கப்பட்ட முறையாகும்

6) **பாடசாலையின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு மாதிரியைத் தருக.**

மாணவர்கள்
↑
வகுப்புத் தலைவன் / தலைவி
↑
மாணவத் தலைவன் / தலைவி
↑
வகுப்பாசிரியர் / வகுப்பாசிரியை
↑
பிரதி அதிபர்
↑
பழைய மாணவர் சங்கம் ➡ அதிபர் ⬅ பாடசாலை அபிவிருத்திக் குழு

www.ikeda.lk

7) பாடசாலை ஒழுங்கமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் நபர்கள் யாவர்?



- ✓ அதிபர்
- ✓ கல்விசாரா ஊழியர்கள்
- ✓ ஆசிரியர்கள்
- ✓ மாணவத் தலைவர்கள்
- ✓ பிரதி அதிபர் உப அதிபர்

8) அதிபரின் கடமைகளைத் தருக.

- ✓ கல்விச் செயற்பாடுகளின் தலைவராகச் செயற்படுதல்
- ✓ பாடசாலையின் அனைத்து செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்தல்
- ✓ பிள்ளைகளைச் சேர்த்தல், அவர்களது வகுப்புகளை ஒழுங்குபடுத்தல், வகுப்புகளுக்கு ஆசிரியர்களை நியமித்தல்
- ✓ நேர சூசியைத் தயாரித்தல் மற்றும் அதன் பிரகாரம் வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்தல்

9) பாடசாலைத் தலைவர் என்ற வகையில் அதிபரின் கடமைகளைத் தருக.

- ✓ திணைக்களச் சட்டதிட்டங்கள், சுற்றுநிருபங்களை அமுல்படுத்தலும் திணைக்களத்துக்குப் பொறுப்புக்கூறலும்
- ✓ பெற்றோர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அரசசார் மற்றும் அரசசாரா நிறுவனங்களின் உதவியோடு பாடசாலையை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லல்
- ✓ பாடசாலைக் கற்றல் - கற்பித்தலுக்குத் தேவையான கருவிகள், விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளலும் அவற்றைப் பயன்படுத்துவதற்குரிய சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்குதலும்

10) ஆசிரியர்களின் கடமைகளைத் தருக.

- ✓ மாணவர்களுக்கு நல்வழிகாட்டுதலும் அவர்களிடம் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துதலும்
- ✓ பாடசாலைப் பயனாளிகளின் ஒத்துழைப்புடன் செயலாற்றுதல்
- ✓ மாணவர்களிடத்தில் அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியை ஏற்படுத்துதல்
- ✓ விழுமியங்களுக்கு ஏற்ப செயற்படுதல்
- ✓ பாடசாலையின் கல்வி மற்றும் பௌதீக வள விருத்திக்கு உதவுதல்

11) கல்வி சாரா ஊழியர்களது கடமைகளைத் தருக.

- ✓ பாடசாலைச் செயற்பாடுகளை நடாத்திச் செல்வதற்கு அதிபர், ஆசிரியர்களுக்கு உதவுதல்
- ✓ பாடசாலை சூழலை அழகாகவும், தூய்மையாகவும் பேண உதவுதல்
- ✓ பாடசாலையின் பாதுகாப்புக்கு உதவுதல்
- ✓ மாணவர்களோடு ஒத்துழைப்புடனும் நற்பண்புடனும் நடந்து கொள்ளல்

12) மாணவர்களின் கடமைகளைத் தருக.

- ✓ தினந்தோறும் பாடசாலைக்கு சமூகமளித்தல்
- ✓ கல்வியை விருப்புடன் கற்றல்
- ✓ அதிபர் உட்பட ஆசிரியர்களை மதித்தல்
- ✓ பாடசாலையின் ஏனைய மாணவர்களுடன் ஒத்துழைப்பாகவும் ஒற்றுமையாகவும் செயலாற்றுதல்



www.ikodu.lk

13) பாடசாலை ஒழுங்கமைப்பினுள் இடம்பெறும் வேறு குழுக்களைத் தருக.

- ✓ விளையாட்டு குழு
- ✓ நலன்புரி குழு
- ✓ சுற்றாடல் குழு
- ✓ சமயக் குழு
- ✓ சாரணர் குழு

14) உங்களிடம் காணப்படும் சிறந்த நற்பண்புகளைத் தருக.

- ✓ கருணை
- ✓ பிறரை மதித்தல்
- ✓ உண்மை பேசுதல்
- ✓ ஒழுக்கம்
- ✓ பொறுமை
- ✓ எளிமை



15) இலவசக் கல்வியின் தந்தை யார்?

- ✓ கலாநிதி C.w.w கன்னங்கர

16) இலவசக் கல்வியை எந்த ஆண்டு அறிமுகப்படுத்தினார்?

- ✓ 1945

17) தனிமனித திறமைகளை அதிகரித்துக் கொள்வதற்குப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்களைத் தருக.

- ✓ தனது வாழ்க்கை அனுபவங்கள்
- ✓ பிற மனிதர்களின் வாழ்க்கை அனுபவங்கள்
- ✓ குடும்பத்திலிருந்து அல்லது தான் பிரதிநிதித்துவப்படுகின்ற சமூக குழுக்கள்
- ✓ சமூகத்தில் செயற்படுத்தப்படுகின்ற பல்வேறு பயிற்சி நெறிகளில் கலந்து கொள்வதன் மூலம்

18) உங்களிடம் காணப்படும் திறமைகளை வளர்த்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?

- ✓ தனக்கு இயலுமான, தனக்கு விருப்பமானதைத் தெரிந்து அதனைத் திறம்படச் செய்தல்.
- ✓ உங்கள் திறமைகளை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிப்படுத்தி அதன் மூலம் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளல்
- ✓ தனது திறமை, சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தேவை என்பதை உணர்ந்து அவற்றை மேலும் விருத்தி செய்து கொள்ளல்

19) உம்மிடம் காணப்படும் பலவீனங்களை பட்டியலிடுக.

- ✓ பொறுமையின்மை
- ✓ கோபப்படுதல்
- ✓ பொய்பேசுதல்
- ✓ நண்பர்களைக் கேலிசெய்தல்



www.ikeguide

20) பலவீனங்களைக் குறைத்துக் கொள்ளப் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் எவை?

- ✓ தன்னுடைய பலவீனங்களை இனங்காணுதல்
- ✓ தன்னிடம் காணப்படும் பலவீனங்களை இயன்றளவு குறைத்துக் கொள்வேன் என்று உறுதி கொள்ளல்
- ✓ தன்னுடைய பலவீனங்களை பிறர் சுட்டிக்காட்டும்போது அதனைப் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்ளல்
- ✓ தான் அறிந்து கொண்ட தவறுகள் மீண்டும் ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளல்

21) மாணவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் எவை?



- ✓ பொருளாதாரப் பிரச்சினை
- ✓ பிறர் உங்களை மதிக்காமை
- ✓ தலைமைத்துவம் கிடைக்காமை
- ✓ ஏனையோர் உங்களை ஏற்றுக்கொள்ளாமை
- ✓ குழப்பக்கார மாணவர்களின் தொந்தரவு

22) அரச ஒசுசல நிலையங்களை அமைத்தவர் யார்?

- ✓ பேராசிரியர் சேனக பிபிலே

23) மாணவர்களின் அபிவிருத்திக்காக பாடசாலையினால் கிடைக்கப்பெறும் வாய்ப்புக்கள் எவை?

- ✓ சிரமதானப் பணியில் ஈடுபடும் சந்தர்ப்பம்
- ✓ வகுப்பறைக் கற்றலில் ஈடுபடுதல்
- ✓ விளையாட்டுப் போட்டியில் மாணவர்கள் ஈடுபடுதல்
- ✓ ஆசிரியரின் வழிகாட்டலில் சுதந்திரமாக செயற்பாடொன்றில் ஈடுபடுதல்

24) மாணவனின் இலக்கை அடைந்து கொள்வதற்கும் அதனை விருத்தி செய்து கொள்வதற்கும் எவ்வாறான சந்தர்ப்பங்களை உருவாக்கிக்கொள்ள முடியும்?

- ✓ பாடத்திற்குப் பொருத்தமான மேலதிக நூல்களை வாசித்தல்
- ✓ கல்வி நிகழ்ச்சிகளைப் பார்வையிடல்
- ✓ பாட நூல்களை முறையாகப் பாவித்தல்
- ✓ விளையாட்டு மற்றும் பாட இணைச் செயற்பாடுகளில் புறத்தேர்ச்சிகளை கூட்டிக் கொள்ளல்
- ✓ அறிவு மற்றும் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல்

25) திட்டமிடல் என்றால் என்ன?

- ✓ ஏதாவதொரு விடயத்தில் உச்சப் பயனைப் பெறும் வகையில் அதனைப் பகுதிபகுதியாக, முறையாக குறித்த காலப்பகுதிக்குள் செய்து முடிப்பதாகும்

26) திட்டமிடுவதாலும் ஒழுங்கமைப்பதாலும் கிடைக்கும் நன்மைகள் எவை?

- ✓ நோக்கங்களை இலகுவாக அடைந்து கொள்ளலாம்
- ✓ மகிழ்ச்சியை ஏற்படுத்தும்
- ✓ தன்னம்பிக்கையை உருவாக்கும்
- ✓ நேரம் மீதமாகும்
- ✓ பதற்றம் குறையும்



www.ikeduk.lk

27) திட்டமிட்டுச் செயற்படும் மாணவனுக்கும் திட்டமிடாது செயற்படும் மாணவனுக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?

திட்டமிட்ட மாணவன்	திட்டமிடாத மாணவன்
முறையாக செயற்படுவார்	அத்தியாவசியமான நடவடிக்கைகளை கைவிடுவர்
உளநெருக்கீடு இன்றி செயற்படுவார்	உளநெருக்கிடையோடு கருமங்களில் ஈடுபடுவர்
நேரத்தை உச்ச முறையில் பயன்படுத்துவார்	நேரம் வீணடிக்கப்படும்
நோக்கத்தை அடைந்து கொள்வார்	பின்னடைவு ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம்
இலகுவாக சவால்களை வெற்றி கொள்வார்	சவால்களுக்கு முகங்கொடுக்க சிரமப்படுவார்

28) வகுப்பறையைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்துக்கொள்வதற்குப் பொருத்தமான முறையில் வேலைத்திட்டமொன்றைத் திட்டமிடும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் எவை?

- ✓ வகுப்பறையில் பயன்படுத்தப்படும் பொருட்களை அறிதல்
- ✓ நிலவுகின்ற குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றைக் குறித்துக் கொள்ளல்
- ✓ மிகவும் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வகுப்பறையை வைத்துக் கொள்வதற்கு ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளல்
- ✓ ஆலோசனையின் படி உடனடியாகச் செய்ய வேண்டியதைத் தீர்மானித்தல்
- ✓ அதன்படி செயற்படுத்துவதற்குப் பொருத்தமான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்

29) பாடசாலையில் அல்லது வகுப்பறையில் எவ்வாறான சந்தர்ப்பங்களில் முறையாகத் திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் அச்செயலில் தவறுகள் ஏற்படாதவாறு சிறப்பாகச் செய்யலாம்?

- ✓ விளையாட்டு விழாவின் போது
- ✓ கலை நிகழ்ச்சிகளின் போது
- ✓ பரிசளிப்பு வைபவங்களின் போது
- ✓ சிறுவர் தின நிகழ்வின் போது
- ✓ சர்வதேச ஆசிரியர் தினத்தின் போது



30) பாடசாலைக் கலாச்சாரத்தில் உள்ளடங்குபவை எவை?

- ✓ பாடசாலையில் காணப்படும் சட்டதிட்டங்கள்
- ✓ சம்பிரதாயங்கள்
- ✓ பழக்க வழக்கங்கள்
- ✓ பாடசாலையின் தனித்துவத்தைப் பிரகாசிக்கச் செய்யும் பாடசாலையின் இலச்சினை

www.ikeou.lk

31) பாடசாலைக்கு சட்டதிட்டங்கள் அவசியமாவதற்கான காரணங்கள் எவை?



- ✓ பாடசாலையினுள் சிறந்த கற்றல் சூழலொன்றை ஏற்படுத்துவதற்கு
- ✓ பாடசாலையை முறையாக நிருவகிப்பதற்கு
- ✓ ஒழுக்கசீலர்களான மாணவர்களை உருவாக்குவதற்கு
- ✓ மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு
- ✓ பாடசாலையின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கு

32) மாணவர்கள் தொடர்பாகப் பாடசாலையில் காணப்படுகின்ற பொதுவான சட்டதிட்டங்கள் எவை?

- ✓ பாடசாலைக்குத் தினமும் சமுகமளித்தல்
- ✓ பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னர் பாடசாலைக்குச் சமூகமளித்தல்
- ✓ குறிப்பிட்ட சீருடையில் பாடசாலைக்குச் சமூகமளித்தல்
- ✓ பாடசாலை நேரம் முடியும் வரையில் பாடசாலையிலேயே இருத்தல்
- ✓ நேரசூசிப்படி கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடல்
- ✓ அதிபருக்கும் ஆசிரியருக்கும் கீழ்படிதலும் மரியாதை செலுத்துதலும்

33) சம்பிரதாயங்களைப் பாதுகாப்பதன் அவசியம் யாது?

- ✓ மாணவர்களிடையே நற்போதனைகளைக் கட்டியெழுப்புதல்
- ✓ தன்னம்பிக்கையுடைய சமூகமொன்றை உருவாக்குதல்
- ✓ பாடசாலையின் தனித்துவத்தைப் பாதுகாத்தல்
- ✓ எதிர்கால மாணவ சமூகத்திற்கு அவற்றை ஒப்படைத்தல்

34) பாடசாலையின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் இலச்சினைகள் எவை?



- ✓ மகுடவாசகம் (Motto)
- ✓ பாடசாலை இலச்சினை (School logo)
- ✓ பாடசாலைக்கொடி (School Flag)
- ✓ பாடசாலைக் கீதம்
- ✓ பாடசாலையின் நோக்கக் கூற்று (Vision)

35) பாடசாலையின் மகுடவாசகம் என்றால் என்ன?

- ✓ மாணவர்களினது வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்வதற்கு முன்மாதிரியாக அமையும் வண்ணம் தயாரிக்கப்பட்டிருப்பது

36) பாடசாலை இலச்சினைகள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களைத் தருக.

- ✓ பாடசாலையின் கடிதத் தலைப்புகளில்
- ✓ பாடசாலைச் சீருடையில்
- ✓ பாடசாலையில் வெளியிடப்படும் புத்தகங்கள், சஞ்சிகைகளில்
- ✓ பாடசாலைக்குரியது என்பதை உணர்த்துவதற்கு
- ✓ பாடசாலையின் அடையாளத்தை உணர்த்துவதற்கு

37) பாடசாலைக் கொடி ஏற்றப்படும் சந்தர்ப்பங்களைத் தருக.

- ✓ காலைக் கூட்டத்தின் போது
- ✓ இல்ல விளையாட்டுப் போட்டியின் போது
- ✓ பாடசாலையில் நடைபெறும் வேறு விழாக்களின் போது



www.ikeou.lk

38) பாடசாலைக் கொடி ஏற்றப்படும் போது கடைபிடிக்க வேண்டியவை எவை?

- ✓ பாடசாலைக் கொடியைப் பார்த்த வண்ணம் நிமிர்ந்து நிற்றல்
- ✓ பாடசாலைக் கொடியை மரியாதையுடன் ஏற்றுதல்
- ✓ அனைவரும் ஒன்று சேர்ந்து பாடசாலைக் கீதத்தைப் பாடுதல்

39) பாடசாலை கீதத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பணிகள் எவை?

- ✓ பாடசாலையின் மூலம் சமூகத்துக்கு ஆற்றப்படும் பணிகள் பற்றி மாணவர்களுக்குத் தெரியப்படுத்துதல்
- ✓ மாணவர்களிடையே தமது பாடசாலையின் மீது கௌரவம், அபிமானம், அன்பு போன்றன ஏற்படுதல்
- ✓ பாடசாலையின் அடையாளத்தை வெளிப்படுத்துதல்



40) பாடசாலைக் கீதம் இசைக்கப்படும் சந்தர்ப்பங்களைத் தருக.

- ✓ பாடசாலை ஆரம்பமாகும் போது
- ✓ பாடசாலையில் நடைபெறும் விசேட வைபவங்களின் போது
- ✓ பாடசாலை இல்ல விளையாட்டின் போது

41) பாடசாலைக் கீதம் இசைக்கப்படும் போது கவனிக்க வேண்டியவை எவை?

- ✓ பாடசாலைக் கீதத்தை தாளத்திற்கேற்ப பாடுதல்
- ✓ பாடசாலைக் கீதத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் பாடுதல்
- ✓ சீரான முறையில் நின்று பாடுதல்
- ✓ பாடசாலைச் கீதத்தைப் பாடும்போது எச்செயல்களிலும் ஈடுபடாதிருத்தல்

42) பாடசாலைச் சமூகத்தின் உறுப்பினர் என்ற வகையில் உமக்குரிய உரிமைகள் எவை?

- ✓ கல்வி கற்பதற்கான உரிமை
- ✓ தமது திறமைகளை விருத்தி செய்து கொள்வதற்கான உரிமை
- ✓ பாதுகாப்பாக இருப்பதற்கான உரிமை
- ✓ சமமாக மதிக்கப்படுவதற்கான உரிமை
- ✓ தமது கருத்துகளை வெளிப்படுத்துவதற்கான உரிமை

43) உங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் உங்கள் ஆற்றல்களை விருத்தி செய்து கொள்வதற்குமென அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற வசதிகள் எவை?

- ✓ இலவசக் கல்வி
- ✓ இலவசப் பாட நூல்கள்
- ✓ ஆய்வுகூட வசதிகள்
- ✓ இலவச சீருடை
- ✓ விளையாட்டு உபகரணங்கள்

44) ஆசிரியர்களுக்கென மாணவர்களால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகள் எவை?

- ✓ கற்றல் நடவடிக்கைகளில் சிறப்பாக ஈடுபடுதல்
- ✓ தேவையான சந்தர்ப்பங்களின் போது உதவி செய்தலும் ஒத்துழைப்பு வழங்குதலும்
- ✓ ஆசிரியர்களின் அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் கேட்டுச் செயற்படுதல்
- ✓ ஆசிரியருக்கு மதிப்பளித்து நடத்தல்
- ✓ மரியாதையுடனும் கீழ்ப்படிவுடனும் நடந்து கொள்ளல்

www.kedu.lk

45) மாணவர்களுக்காக ஆசிரியர்களால் நிறைவேற்றப்படும் கடமைகளும் பொறுப்புக்களும் எவை?

- ✓ மாணவர்களுக்குச் சிறந்த கல்வியை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதும்
- ✓ உங்கள் அனைவரையும் நற்பிரசையாக உருவாக்குதலும்
- ✓ நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவசியமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் முன்வைப்பார்
- ✓ கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதும் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதும் நீங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும். இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கும் தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் வழங்குவர்
- ✓ உங்கள் திறமைகளை இனங்கண்டு அவற்றை சமூகத்திற்கு வெளிக்காட்டும் பாரிய பணியை நிறைவேற்றுவது

46) மாணவர்களால் சக மாணவர்களுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் எவை?

- ✓ ஒத்துழைப்புடனும் சமத்துவத்துடனும் செயற்படுதல்
- ✓ பண்புள்ள செயற்பாடுகளில் ஈடுபடல்
- ✓ தேவையின் போது உதவி செய்தல்
- ✓ வயதில் குறைந்த சகோதர சகோதரிகளுக்குப் பாதுகாப்பளித்தல்
- ✓ அவர்களுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ளல்

47) பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையிலான பல்வேறு தொடர்புகளைத் தருக.

- ✓ நலன் விரும்பிகள்
- ✓ மதகுருமார்கள்
- ✓ பெற்றோர்கள்
- ✓ பாடசாலை
- ✓ பழைய மாணவ மாணவர்கள்

48) பாடசாலையின் மூலம் சமூகத்திற்கு ஆற்றப்படும் சேவைகள் எவை?

- ✓ நற்பிரசைகளை உருவாக்குதல்
- ✓ மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்தல்
- ✓ எதிர்காலத்திற்கான நல்ல தலைவர்களை உருவாக்குதல்
- ✓ பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியை வழங்குதல்
- ✓ நல்வாழ்க்கையை நடாத்துவதற்கான வழிகாட்டல்களை வழங்குதல்

49) பாடசாலை மூலம் சமூகத்திற்கு வழங்கப்படும் தகவல்கள் எவை?



- ✓ குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதன் முக்கியத்துவம்
- ✓ சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்க பழக்குதல்
- ✓ நற்பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தல்
- ✓ உரிய போசாக்குத் தொடர்பான முக்கியத்துவம்
- ✓ சூழலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம்

50) சமூகத்தினால் பாடசாலைக்கு ஆற்றப்படும் சேவைகள் எவை?

- ✓ பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல்
- ✓ பாடசாலைச் சொத்துகளைப் பாதுகாத்தல்
- ✓ பாடசாலையின் பல்வேறு வைபவங்களில் பங்கேற்றல்
- ✓ பிரசைகளின் கலாசார உரிமைகள் மற்றும் சமூகக்கருத்துக்களை பாடசாலைக் கல்வியில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளல்

www.ikeou.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

51) பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையே தொடர்புகள் ஏற்படுவதன் நோக்கங்கள் எவை? அதற்காக இயங்கும் நிறுவனங்களைத் தருக.

- ✓ அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியைப் பெற்றுக் கொடுத்தல்
- ✓ பாடசாலைப் பயனாளிகளிடையே இது எனது பாடசாலை என்ற எண்ணக்கருவை உருவாக்குதல்
- ✓ உச்ச வளப்பன்பாடு
- ✓ மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை அறிந்து செயற்படுதல்
- ✓ பாடசாலையில் நடைபெறும் செயற்பாடுகளை தேவைக்கேற்ப மாற்றியமைக்க கூடியதாக இருத்தல்
- ✓ (பாடசாலை அபிவிருத்திக்குழு, பாடசாலை முகாமைத்துவ குழு போன்றன நியமிக்கப்பட்டுள்ளன)

52) பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் உள்ளடங்குபவர்கள் யாவர்? இதன் தலைவர் யார்?



- ✓ பெற்றோர்
- ✓ பழைய மாணவர்கள்
- ✓ ஆசிரியர்கள்
- ✓ வலயக் கல்விக் காரியாலய உறுப்பினர்கள்
- ✓ **தலைவர் அதிபர்**

53) பழைய மாணவர் சங்கம் மற்றும் நலன்விரும்பிகளால் பாடசாலைக்கு கிடைக்கும் நன்மைகள் எவை?

- ✓ பாடசாலைக் கட்டடங்கள்
- ✓ உபகரணங்கள்
- ✓ மாணவர்களுக்கான மதிய உணவுகள்
- ✓ தேவையான போது ஆலோசனைகள்
- ✓ பாடசாலையின் விசேட வைபவங்களின் போது ஒத்துழைப்புக்கள் வழங்குதல்

54) மக்கள் பிரதிநிதிகளால் பாடசாலைக்குக் கிடைக்கும் நன்மைகள் எவை?

- ✓ பாடசாலையின் வளர்சிக்குத் தேவையான பணம், உபகரணங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்
- ✓ மக்கள் பிரதிநிதிகளுடனான தொடர்பானது பாடசாலையின் அபிவிருத்திக்கான சந்தர்ப்பத்தை மேலும் அதிகரிக்கும்

55) சமூகத்தினால் பாடசாலைக்கு ஆற்றப்படும் சேவைகள் எவை?

- ✓ சிரமதானம்
- ✓ வைத்தியப் பரிசோதனை

56) பாடசாலையால் சமூகத்திற்கு ஆற்றப்படும் சேவைகள் எவை?

- ✓ பாடசாலையின் ஆராதனை மண்டபம், விளையாட்டு மைதானம், கட்டடம் போன்றவற்றை தேவை ஏற்படும்போது மக்களுக்கு வழங்குதல்
- ✓ சுகாதார முகாம்களை நடாத்துதல்
- ✓ தற்காலத்திற்கேற்ற சுகாதார முறைகள், சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்



www.ikedu.lk

57) பாடசாலையானது சமூகத்திடமிருந்து ஒத்துழைப்பினைப் பெற்றுக்கொள்ளும் விதத்தைத் தருக.

- ✓ மக்களிடமிருந்து பெறக்கூடிய வளங்களை வினைத்திறனுடன் பாடசாலையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல்
- ✓ பாடசாலையின் அபிவிருத்திக்குத் தேவையான பல்வேறு தகவல்களை சமூகத்தில் உள்ள திறமையாளர்களிடம் இருந்தும், வளவாளர்களிடமிருந்தும் பெற்று நடைமுறைப்படுத்தல்

58) பிள்ளை நேயப் பாடசாலை என்றால் என்ன?

- ✓ பிள்ளையை மையமாகக் கொண்டு, சுகாதார வசதிகளையும் பாதுகாப்புச் சூழலையும் வழங்குகின்ற பாடசாலையே பிள்ளை நேயப் பாடசாலை எனப்படுகிறது. இங்கு அனைத்து மாணவர்களது உரிமைகளும் பாதுகாப்படுகிறன. இங்கு பிள்ளைகள் வறுமை, விசேட தேவை, தொற்றுநோய்கள் போன்றனவற்றிற்குட்பட்டிருப்பினும், எல்லாப்பிள்ளைகளும் இன மத பேதமின்றி சமமாகக் கவனிக்கப்படுவர். இவ்வாறாகச் சிறுவர்களது அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்ற பாடசாலைகளே **பிள்ளை நேயப் பாடசாலைகள்** ஆகும்

59) பிள்ளை நேயப் பாடசாலைச் சூழலின் பண்புகள் எவை?


- ✓ நீர் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வசதிகள் காணப்படல்
- ✓ பாடசாலைச் சூழல் பிள்ளைகள் அனைவரும் மகிழ்ச்சியுடனும் விருப்புடனும் கல்விகற்கும் இடமாக மாற்றப்படல்
- ✓ மாணவர்களிடையே அந்நியோன்யம், சமத்துவம், சகோதரத்துவம் என்பவற்றை வளர்த்தல்
- ✓ பாடசாலை பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
- ✓ பாடசாலைச் சூழலை அமைதியாகவும் சுத்தமாகவும் பேணுதல்



www.ikeou.lk

02 நாம் வாழும் பிரதேசம்

01. நாம் வாழும் பிரதேசத்தில் காணப்படும் வெவ்வேறுபட்ட நிர்வாக மட்டங்களைத் தருக.



02. எமது நாட்டின் நிர்வாகப்பிரிவுகளுள் மிகச் சிறிய நிர்வாக அலகாகக் காணப்படுவது எது?

✓ கிராம உத்தியோகத்தர் பிரிவு

03. கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு பொறுப்பான அதிகாரி யார்?

✓ கிராம உத்தியோகத்தர்

04. கிராம உத்தியோகத்தரின் பிரதான பணி யாது?

✓ கிராம உத்தியோகத்தர், கிராம மக்களையும், கிராமம் தொடர்பான தகவல்களையும், அரசாங்கத்தோடு பகிர்ந்து கொள்ளும் ஒரு இணைப்பு அதிகாரியாகச் செயற்படுகிறார்.

05. இலங்கையில் எத்தனை கிராம உத்தியோகத்தர் பிரிவு காணப்படுகிறது?

✓ 14022

06. பிரதேச செயலாளர் பிரிவு என்றால் என்ன?

✓ கிராம அலுவலர் பிரிவுகள் பல ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட நிர்வாக அலகே பிரதேச செயலாளர் பிரிவாகும்.

07. பிரதேச செயலாளர் பிரிவிற்கு பொறுப்பான அதிகாரி யார்?

✓ பிரதேச செயலாளர்

08. பிரதேச செயலாளரின் பிரதான பணி யாது?

✓ தனது கட்டுபாட்டிலுள்ள சகல கிராம அலுவலர் பிரிவுகளையும் பரிபாலித்தலுடன் அரசின் சகல நடவடிக்கைகளுக்கும் பொறுப்பானவர் பிரதேச செயலாளரே.

09. இலங்கையில் எத்தனை பிரதேச செயலாளர் பிரிவு காணப்படுகிறது?

✓ 331



www.ikedu.lk

10. மாவட்டம் என்றால் என்ன?

- ✓ பல பிரதேச செயலாளர் பிரிவுகள் ஒன்றிணைவதன் மூலம் உருவாகும் நிர்வாக அலகு மாவட்டம் எனப்படும்.


11. மாவட்டத்திற்கு பொறுப்பான அதிகாரி யார்?

- ✓ மாவட்டச் செயலாளர்

12. இலங்கையில் எத்தனை நிர்வாக மாவட்டங்கள் காணப்படுகிறது?


- ✓ 25

13. இலங்கையின் நிர்வாக மாவட்டங்களை வரைக.



www.ikeu.lk

14. இலங்கையின் மாகாணங்களை வரைக.



www.ikedu.lk



15. எமது பிரதேசத்திலுள்ள பௌதீக வளங்களின் வகைகளைத் தருக.

- ✓ இயற்கை வளங்கள்
- ✓ செயற்கை வளங்கள்

16. இயற்கை வளங்களுக்கு உதாரணம் தருக.

- ✓ சூரிய ஒளி, காற்று, நீர், மண், மலை, சமவெளி, காடுகள், கடல், நதி, நீர்வீழ்ச்சி




17. செயற்கை வளங்களுக்கு உதாரணம் தருக.

- ✓ கட்டடங்கள், ஆகாய விமானம்

18. பௌதீக வளங்களையும் அவை மனித தேவைகளுக்காகப் பயன்படும் விதத்தையும் அட்டவணைப்படுத்துக.

சூரிய ஒளி	⟹ வெளிச்சம்	சக்தி	
காற்று / வளி	⟹ சக்தி	கைத்தொழில்	பிரயாணம்
நீர்	⟹ குடிநீர்	சக்தி	கைத்தொழில்
நிலம்	⟹ கைத்தொழில்	வசிப்பிடம்	விவசாயம்
காடுகள்	⟹ அரிமரம்	உல்லாச பிரயாண பகுதி	

19. தனிநபர் தேவைகள், சமூக தேவைகள் மற்றும் பொருளாதார தேவைகளுக்காகப் பௌதிக வளங்கள் பயன்படுத்தப்படும் விதத்தை விளக்குக.



www.ikeou.lk



20. பௌதீக வளங்களைப் பாதுகாக்கும் முறைகளை உதாரணத்துடன் தருக.

- ✓ வனங்களைப் பாதுகாத்தல்
  - உதாரணம் மரங்களை நடுதல்
- ✓ வளங்களிலிருந்து உச்ச பயன்பாட்டைப் பெறல்
  - உதாரணம் - மீள் பாவனை, மீள் சுழற்சிக்குட்படுத்தல்
- ✓ வளங்கள் வீணாவதைத் தடுத்தல்
  - உதாரணம் -நீர், மின்சாரம், எரிபொருள்
- ✓ விரைவில் உக்கல் அடையாத பொருட்களை மண்ணோடு கலக்காதிருத்தல்
  - உதாரணம் - மீள் பாவனை, மீள் சுழற்சிக்குட்படுத்தல்

21. எமது பிரதேசத்தில் காணப்படும் மனித வளங்களை தருக.

- ✓ விவசாயிகள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், தாதிகள், மேசன், தச்சன், பொறியியலாளர், அரச ஊழியர்கள், ஆராய்ச்சியாளர்கள், விஞ்ஞானிகள், ஊடகவியலாளர்கள், விளையாட்டு வீரர்கள்

22. மனிதனிடம் காணப்படும் விசேடமான ஆற்றல்களை தருக.



- ✓ அறிவாற்றல்
- ✓ உடல் சார்ந்த ஆற்றல்கள்
- ✓ நுண்ணறிவாற்றல்

23. மனித வளத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் பயிற்சியின் மூலம் கிடைக்கும் நன்மைகள் எவை?



- ✓ ஆற்றல்களை மேலும் வளர்த்துக் கொள்ளல்
- ✓ தொழிற்தகைமையை ஏற்படுத்திக் கொள்ளல்
- ✓ தொழிலை மேலும் சிறப்பாக நடாத்துதல்
- ✓ தொழிலின் மூலம் முன்னேற்றமடைதல்
- ✓ பொருளாதார முன்னேற்றம்
- ✓ நாட்டின் அபிவிருத்தி


24. பிரதேச மக்களுடன் ஒற்றுமையாக வாழ்வதற்கான சில சந்தர்ப்பங்களைத் தருக.



- ✓ வழிபாட்டுத்தலங்கள் அமைத்தல்
- ✓ அன்னதான நிகழ்ச்சிகள்
- ✓ சமய நிகழ்வுகள்
- ✓ திருமண வைபவங்கள்
- ✓ மரணச் சடங்குகள்
- ✓ சிரமதானம்

➢ மனிதன் சமூகப் பிராணியாக இருப்பதனால் அவனால் தனியாக வாழ முடியாது. இதனால் ஒற்றுமையுடன் செயற்படுதல் அத்தியவசியமாகும் கீழே காட்டப்பட்டுள்ள உருவின்படி ஒற்றுமை, சகவாழ்வு விரிவடைந்து செல்கின்ற நிலையை விளங்கிக் கொள்ளலாம்.

1. தனிநபர்
2. குடும்பம்
3. அயலவர்
4. கிராமம் / நகரம்
5. நாடு
6. உலகம்



www.ikedu.lk

25. ஒற்றுமையாக செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் 05 தருக.

- ✓ சகோதரத்துவம்
- ✓ மகிழ்ச்சி
- ✓ ஒற்றுமை
- ✓ நோக்கம் நிறைவேறல்
- ✓ நட்புறவு ஏற்படல்



26. எமக்கு உதவி புரியும் நிறுவனங்கள் சிலவற்றைத் தருக.

- ✓ பிரதேச செயலாளர் காரியாலயம்
- ✓ உள்ளூராட்சி நிறுவனங்கள்
- ✓ சமய வழிபாட்டுத் தலங்கள்
- ✓ வைத்தியசாலை

27. பிரதேச செயலாளர் காரியாலயம் மூலம் ஆற்றப்படும் சேவைகளைத் தருக.

- ✓ பிறப்புச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்தல்
- ✓ கிராம அலுவலர் அத்தாட்சியை உறுதிப்படுத்தல்
- ✓ அனுமதிப் பத்திரங்களுக்கு அத்தாட்சி வழங்கல் (License)
  உதாரணம் - மரம் வெட்டுதல், அரச நிலம், சூழல் பாதுகாப்பு வாகனம் என்பவற்றிற்கு அனுமதிப்பத்திரம்
- ✓ ஓய்வுதியப் பணத்தை பெற்றுக் கொடுத்தல்
- ✓ அடையாள அட்டையைப் பெற்றுக் கொடுத்தல்
- ✓ நிவாரண உதவி வழங்கல்



28. உள்ளூராட்சி நிறுவனங்களைத் தருக.

- ✓ மாநகர சபை
- ✓ நகர சபை
- ✓ பிரதேச சபை

29. மாநகர சபை என்றால் என்ன?

- ✓ நகரமயமாக்கப்பட்ட நகரங்களின் சுற்றாடல் தொடர்பான அதிகாரத்தைக் கொண்டிருப்பது மாநாகரசபையாகும்

30. இலங்கையில் காணப்படும் மாநகர சபைகள் எவை?

- ✓ கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், குருணாகல், நுவரெலியா, அக்கரைப்பற்று, கல்முனை, தெஹிவளை கல்கிஸ்ஸ, மற்றும் கடுவெல
- ✓ **இதன் பொறுப்பாளர் நகரபிதா ஆவார்.**

31. மாநகர சபையால் எமக்கு ஆற்றப்படும் சேவைகளைத் தருக.

- ✓ பாதைகளைச் சுத்தம் செய்தல், பராமரித்தல்
- ✓ நீர் வழங்கல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ✓ குப்பை கூழங்களை அகற்றல்
- ✓ பொதுச் சந்தை மற்றும் பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்பு என்பவற்றைப் பேணல்
- ✓ நூலகம் மற்றும் விளையாட்டு மைதானம் என்பவற்றை பராமரித்தல்
- ✓ பொதுச் சொத்துக்களை உருவாக்கலும் பேணிப் பாதுகாத்தலும்
- ✓ தெரு விளக்குகளைப் பராமரித்தல்

www.lkequ.lk

32. நகர சபை என்றால் என்ன?

- ✓ சனத்தொகைச் செறிவு குறைவாக இருப்பினும் கூட நகர மயமாக்கலுக்குட்பட்ட பிரதேசம் நகர சபையாகும். **இதன் பொறுப்பாளர் தலைவர் ஆவார்.**

33. நகர சபையால் ஆற்றப்படும் சேவைகளைத் தருக.

- ✓ மக்களுக்கான சுகாதார சேவைகளை வழங்குதல்.
- ✓ நூலகம், விளையாட்டு மைதானம், பொது மலசலகூடம் என்பவற்றைப் பராமரித்தல்
- ✓ நீர் வழங்கல் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ✓ பொதுக்கட்டடங்களை நிர்வகித்தலும், பராமரித்தலும்
- ✓ குப்பை கூழங்களை வெளியேற்றல், நகரத்தைச் சுத்தப்படுத்துதல்

34. பிரதேச சபை என்றால் என்ன?

- ✓ பிரதேச சபை நகர சபையினுள் உள்ளடக்கப்படாத கிராமிய பிரதேசங்கள் மற்றும் நடுத்தரமான நகரப்பிரதேசங்கள் பிரதேச சபைக்கு உரியனவாகும். **இதன் தலைவர் தவிசாளர் ஆவார்.**

35. பிரதேச சபையினால் ஆற்றப்படும் சேவைகள் எவை?

- ✓ தமது பிரதேசத்தினுள் தெருக்களை அமைத்தல் அவற்றைப் பராமரித்தல்
- ✓ குளியல் நிலையங்கள், வியாபார மத்தியஸ்தானங்களை நடாத்திச் செல்லல்
- ✓ குப்பை கூழங்களை அகற்றுதல்
- ✓ வீதிகளைச் சுத்தம் செய்தலும் வீதி விளக்குகளைப் பராமரித்தலும்
- ✓ வீடு கட்டுவதற்கான அனுமதிகளை வழங்குதல்
- ✓ சமூகத்தில் நற்செயல்கள் நடைபெறுவதற்கான சேவைகளை வழங்குதல்

36. சமய வழிபாட்டுத் தலங்களால் ஆற்றப்படும் சேவைகள் எவை?

- ✓ ஆலோசனை வழிகாட்டல் வழங்குதல்
- ✓ சமய அறிவை வழங்குதல்
- ✓ இனங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்துதல்
- ✓ மனிதனின் ஆன்மீகப் பண்புகளை மேம்படுத்துதல்
- ✓ மக்களின் நலனுக்கு முக்கியத்துவமளித்துச் செயற்படல்



37. எமது பிரதேசத்திலுள்ள சங்கங்கள் எவை?

- ✓ இளைஞர் கழகம்
- ✓ சமய சங்கம்
- ✓ மரண உதவிச் சங்கம்
- ✓ மீனவர் சங்கம்
- ✓ கூட்டுறவுச் சங்கம்
- ✓ கமத் தொழிற் சங்கம்
- ✓ கிராம அபிவிருத்திச் சங்கம்







www.ikedu.lk

38. பிரதேசத்திலுள்ள சங்கங்கள், கழகங்களினால் ஆற்றப்படும் சேவைகள் எவை?

சங்கங்கள்	ஆற்றப்படும் சேவைகள்
கூட்டுறவுச் சங்கம்	பொருட்களின் மலிவு விற்பனை, விவசாயப் பொருட்களை வாங்கி விற்றல்
கமத் தொழிற் சங்கம்	ஆலோசனை வழங்கல், உதவித்தொகை பெற்றுத்தரல் / நலன்புரி சேவைகளை வழங்கல்
மீனவர் சங்கம்	விலைக்கு வாங்கல், நலன்புரி சேவைகளை வழங்கல்
கிராம அபிவிருத்திச் சங்கம்	பிரதேசத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள
மரண உதவிச் சங்கம்	மரண உதவிச் சேவைகள், நலன்புரி சேவைகளை வழங்கல்

39. எமக்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் கடமைகள் எவை?

- ✓ தமது சேவைகளை உரிய முறையில் வழங்குதல்
- ✓ வினைத்திறனுடன் கடமையாற்றல்
- ✓ சரியான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்
- ✓ பாரபட்சமின்றிச் செயற்படுதல்
- ✓ நியாயமாகச் செயற்படல்



40. சேவையைப் பெற்றுக் கொள்பவர்களின் கடமைகள் எவை?

- ✓ வரிப்பணத்தை முறையாகச் செலுத்துதல்
- ✓ சேவை வழங்குனர்களுக்கான ஒத்துழைப்பை முறையாக வழங்குதல்
- ✓ சேவை வழங்குபவருக்கு ஒத்துழைப்பு வழங்குதல் சாராம்சம் வழங்கல்.
- ✓ ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களை ஒழுங்காகப் பின்பற்றல்
- ✓ சேவை வழங்கும் நிறுவனம் மற்றும் அதன் சொத்துக்களைப் பாதுகாத்தல்

www.ikedu.lk

LEARN EASY
- KNOWLEDGE IS POWER -
www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

03 நற்பிரசை

01. நற்பிரசையாக வாழ்வதற்கு தேவையான பண்புகளை தருக.

- ✓ கௌரவமான சொற்பிரயோகம்
- ✓ நன்னடத்தை
- ✓ ஒழுக்கம்
- ✓ சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கக்கூடிய தன்மை
- தாய் நாட்டுக்குரிய வளங்களையும் பொதுச்சொத்துக்களையும் பாதுகாத்து தாய் நாட்டின் அபிமானத்தை காப்பாற்றுவது நற்பிரசையொருவரின் கடமையாகும்.

02. மரியாதைமிக்க உரையாடலின் பண்புகள் எவை?

- ✓ அடக்கமாக உரையாடுவார்
- ✓ பண்பான வார்த்தைகளைப் பயன்படுத்துவார்
- ✓ அன்பு வெளிப்படக்கூடிய பொருத்தமான தொணியில் உரையாடுவார்
- ✓ சரியாகவும் தெளிவாகவும் கருத்துக்களை வெளிப்படுத்துவார்
- ✓ பிறரை கௌரவமாக மதிப்பார்
- ✓ சரியான நிலையில் இருந்து கொண்டு பேசுவார்
- ✓ பிறரின் கருத்துக்களைச் செவிமடுத்து, பொறுமையாகப் பேசுவார்
- ✓ அனைரும் விரும்பக்கூடியவாறு பேசுவார்

03. மொழியைப் பயன்படுத்த வேண்டிய சந்தர்ப்பங்களைத் தருக.

- ✓ மங்களகரமான விழாக்கள் மற்றும் வரவேற்புசார் விழாக்கள்
- ✓ விளையாட்டு விழாக்கள்
- ✓ துன்பகரமான விழாச் சந்தர்ப்பங்கள்
- ✓ விவாத, உரையாடல் நிகழ்வுகள்
- ✓ பொதுத் தொடர்பாடல் சந்தர்ப்பங்கள் (வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, சஞ்சிகை, ஒலிபெருக்கி)

04. மொழியைப் பயன்படுத்த வேண்டிய இடங்களைத் தருக.

- ✓ மதஸ்தலங்கள் (விகாரை, கோவில், பள்ளிவாசல், தேவாலயம்)
- ✓ வீடு, பாடசாலை, வீதிகள், பேரூந்து, புகையிரதம்

05. மொழியைப் பயன்படுத்த வேண்டிய நபர்களைத் தருக.

- ✓ மதகுருமார்
- ✓ தாய் தந்தையர்
- ✓ ஆசிரியர்கள் நண்பர்கள்
- ✓ விருந்தினர்கள்
- ✓ முதியோர்

06. கௌரவமாக மொழியைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் நன்மைகள் எவை?

- ✓ சமூகத்தில் கௌரவம் கிடைக்கும்
- ✓ நட்பு வளர்க்கப்படும்
- ✓ தலைமைத்துவப் பண்பினைப் பெற்றுக்கொள்வார்
- ✓ பிறரின் பாராட்டைப் பெறலாம்
- ✓ நற் பிரசைகளின் தொடர்பு அதிகரிக்கும்
- ✓ தலைமைத்துவம் கிடைக்கும்
- ✓ சமூகத்தால் சிறந்த ஒருவராக மதிக்கப்படுவார்

www.ikedu.lk

07. அகௌரவமான மொழியைப் பயன்படுத்துவதன் தீமைகள் எவை?

- ✓ நல்லவர்களின் உறவு முறியும்
- ✓ சமூகத்தால் புறக்கணிக்கப்படல்
- ✓ நண்பர்கள் குறைதல்
- ✓ பொருளாதார நஷ்டம் ஏற்படல்
- ✓ தலைமைத்துவம் கிடைக்கின்ற வாய்ப்புகள் குறையும்

08. நுணுக்கமாகச் செவிமடுப்பதால் கிடைக்கும் நன்மைகள் எவை?

- ✓ கிடைக்கப் பெறும் தகவல்களைச் சரியாகப் புரிந்து கொள்ளலாம்
- ✓ தகவல்களுக் கேற்ப பிரதிபலிப்பைக் காட்டுவார்கள்
- ✓ தன்னைப் பற்றியும் பிறரைப் பற்றியும் நம்பிக்கை ஏற்படும்
- ✓ சிறந்த சமூகத்தொடர்பு கட்டியெழுப்பப்படும்
- ✓ அனைவரும் இணக்கப்பாட்டிற்கு வர சந்தர்ப்பம் உண்டு
- ✓ சமூகத் தொடர்பினால் இணைந்து வாழலாம்

09. நுணுக்கமாகச் செவிமடுக்காமையால் ஏற்படும் தீமைகள் எவை?

- ✓ கிடைக்கப்பெறும் தகவல்களைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது
- ✓ தகவல்களுக்கேற்ப பிரதிபலிப்பைக் காட்டமாட்டார்கள்
- ✓ சந்தேகமும் நம்பிக்கையின்மையும் ஏற்பட இடமுண்டு
- ✓ சமூகத் தொடர்பு கட்டியெழுப்பப்பட மாட்டாது
- ✓ இணக்கப்பாட்டிற்கான சந்தர்ப்பம் குறைவு
- ✓ சமூகத் தொடர்பு குறைவதால் தனிமையில் இருக்க நேரிடலாம்

10. நுணுக்கமாகச் செவிமடுத்தலின் போது கவனத்திற் கொள்ள வேண்டியவை எவை?

- ✓ தெளிவான மொழிப் பிரயோகத்தைப் பாவித்தல்
- ✓ கவனமாகச் செவிமடுத்தல்
- ✓ விளங்கிக் கொள்ளும் வகையில் செவிமடுத்தல்

11. தொடர்பாடல் நிகழ்வதற்கு விருத்திசெய்யப்பட வேண்டிய திறன்கள் எவை?

- ✓ தனது கருத்தைத் தெளிவாகவும் பொருத்தமாகவும் முன்வைத்தல்
- ✓ சரியான கருத்தை மதித்தலும் ஏற்றுகொள்ளுதலும்
- ✓ பிறரின் கருத்துகளைப் பொறுமையோடு செவிமடுத்தல்
- ✓ பிறரின் கருத்துகளை ஏற்றுக் கொள்ளல்
- ✓ ஏனையோருக்கு கருத்துகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ✓ இணக்கப்பாட்டிற்கு வர முயற்சித்தல்
- ✓ பொருத்தமான சந்தர்ப்பத்தில் தனது கருத்தை முன்வைத்தல்
- ✓ பகிரங்கமாக கருத்துக்களை முன்வைத்தல்

12. ஒழுக்கம் என்றால் என்ன?

- ✓ சமூகத்தின் எதிர்பார்ப்புக்கேற்ப செயற்படுவதும், சட்டதிட்டங்களை மதித்தலுமாகும். ஒழுக்கம் என்பது விதிமுறைகளின்படி செயற்படுதலாகும். ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல், அன்புசெலுத்தல், ஒருவரது தவறை ஏற்றுக்கொள்ளுதல், மன்னிப்புக்கோரல் என்பன ஏற்படுத்துவது ஒழுக்கமும் நன்னடத்தையும் இருப்பதனாலாகும்.

www.ikedu.lk

13. நன்னடத்தை, ஒழுக்கக் கட்டுப்பாடு என்பவற்றை விருத்தி செய்யத் தேவையான பண்புகள் எவை?



- ✓ சட்ட திட்டங்களைப் பின்பற்றல்
- ✓ ஒருவருக்கொருவர் மரியாதை செலுத்துதல்
- ✓ நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளல்
- ✓ மனித நேயம்
- ✓ நியாயத்தை மதித்தல் கீழ்ப்படிதல்
- ✓ பொறுமையைப் பேணல்
- ✓ சத்தியத்தை மதித்தலும் பேணுதலும்

14. குடும்பத்தில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க மற்றும் நன்னடத்தைகள்.

- ✓ குடும்பத்தில் சகோதர சகோதரிகளுடன் நட்புடனும், சமத்துவத்துடனும் நடந்து கொள்ளல்
- ✓ பெற்றோருக்குக் கீழ்படிதல்
- ✓ மதித்தல், ஒத்துழைப்பு வழங்கல், செவிமடுத்தல்
- ✓ வீட்டிலுள்ள முதியவர்களுக்கு மரியாதை செலுத்தல்
- ✓ மரியாதையாகப் பேசுதல்
- ✓ ஒழுக்கமாகப் பழகுதல்.
- ✓ முதியவர்களின் உரையாடலில் தேவையின்றி குறுக்கிடுவதைத் தவிர்த்தல்

15. வீதியில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க மற்றும் நன்னடத்தைகள்.

- ✓ வீதி ஒழுங்கைப் பேணுதல்
- ✓ தமதும் பிறரதும் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு வீதியை பாவித்தல்.
- ✓ வீதியைப்பொதுச் சொத்தாகக் கருதிப் பாவித்தல்
- ✓ பொறுமையுடன் செயற்படல்
- ✓ பிறருக்கு முன் மாதிரியாக நடத்தல்
- ✓ ஒழுக்கமாக நடந்து தனது கௌரவத்தைப் பாதுகாத்தல்

16. சமூகத்தில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க மற்றும் நன்னடத்தைகள்.

- ✓ சமூகத்தில் எளியவர்களுக்கும் அங்கவீனர்களுக்கும் முதியவர்களுக்கும் உதவி செய்தல்
- ✓ பொதுச் சொத்துக்களைக் கவனமாகப் பாவித்தல்
- ✓ சகல மதங்களுக்கும் மதிப்பளித்தல்
- ✓ ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல்
- ✓ பல்வேறு சமய நிகழ்வுகளில் கௌரவமாக நடந்து கொள்ளல்
- ✓ இடத்துக்குப் பொருத்தமாகப் பழகுவதோடு பொருத்தமான உடையைத் தெரிவு செய்தல்

17. பாடசாலையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்க மற்றும் நன்னடத்தைகள்.

- ✓ கல்வியில் கவனம் செலுத்துதல்
- ✓ பாடசாலைச் சொத்துக்களைப் பாதுகாத்தல்
- ✓ பாடசாலையின் கௌரவத்தைப் பாதுகாத்தல்
- ✓ பாடசாலை சட்டதிட்டங்களை மதித்தல்
- ✓ ஆசிரியர்களுக்கு கீழ்படிதலும் அவர்களுக்கு மதிப்பளித்தலும்

www.kedu.lk

18. சிறந்த ஒழுக்க மாண்புகளைப் பேணுவதன் முக்கியத்துவம் எவை?



- ✓ தனது மதிப்பு மரியாதையைப் பாதுகாத்தல்
- ✓ மகிழ்ச்சியாகவும் எளிமையாகவும் வாழ்தல்
- ✓ பிறரின் கௌரவத்துக்கும் அன்புக்கும் பாத்திரமாதல்
- ✓ பொதுச் சொத்துகளைப் முறையாகப் பாவித்தல்
- ✓ சமயங்களுக்கிடையில் ஒற்றுமையைக் கட்டி எழுப்புதல்
- ✓ சமூகத்தோடு தொடர்புடைய சிறந்த பிரசையாக இருத்தல்

19. சமூகத்தில் காணப்பட வேண்டிய சிறந்த செயற்பாடுகளும் அதனால் கிடைக்கும் பயன்களும்.....

சமூகத்தில் காணப்பட வேண்டிய சிறந்த செயற்பாடுகள்	அதனால் கிடைக்கும் பயன்
கல்வி கற்றல்	அறிவு கிடைக்கும் புத்திஜீவியாகலாம் சிறந்த வாழ்க்கைக்கான அடித்தளம் கிடைக்கும்
சமயத்தைப் பின்பற்றுதலும் அதன் படி செயற்படுதலும்	ஒழுக்கமாக வாழ முடியும் உளவியல் ரீதியில் உற்சாகம் ஏற்படும் விரும்பத்தக்கவனாகுதல்
சரியான சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்தல்	ஆரோக்கியமானவனாக இருந்தல்
ஆரோக்கியமானவனாக இருந்தல்	சமூகத்தின் பாரட்டுகளுக்கு உள்ளாதல் மன மகிழ்ச்சியுடன் இருத்தல்
சிறந்த பண்புள்ள நண்பர்களுடன் பழகுதல்	பாதுகாப்புக் கிடைக்கும் சமூகப் பாராட்டுக் கிடைக்கும்

20. சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத நடவடிக்கைகள் எவை?



- ✓ பாடசாலையில் இருந்து இடைவிலகுதல்
- ✓ பொருத்தமற்ற நண்பர்களின் சவகாசம்
- ✓ வியாபார மோசடிகளில் ஈடுபடுதல்
- ✓ மூடநம்பிக்கையுடன் செயற்படுதல்
- ✓ சட்டரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- ✓ கலாசாரத்துக்குப் பொருத்தமில்லாத வாழ்க்கை முறையில் வாழல்
- ✓ பொருத்தமற்ற உணவுப் பழக்கம்

21. சம்பிரதாயம் என்றால் என்ன? உதாரணம் 3 எழுதுக.

- ✓ தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றதும் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் என்பவற்றைச் சம்பிரதாயம் என்கின்றோம்

  உதாரணம்

  1. தமது சமூகத்திலுள்ள பழக்க வழக்கங்களை மதித்தல்
  2. முதியோரை மதித்தல்
  3. நமது கலாசாரப் பாரம்பரியங்களைப் பாதுகாத்தல்

www.kalvi.lk

22. சட்டம் என்று எதைச் சொல்வீர்கள்? உதாரணம் சில தருக.

- ✓ தனியார் மற்றும் பொது சமூக சிறப்புக்காக பிரசைகளுடைய வெளிநடத்தைகளை நிருவகிக்க அரசால் கொண்டு வரப்பட்டுள்ள நிபந்தனைகளை சட்டம் என அறிமுகப்படுத்த முடியும்.
- ✓ உதாரணமாக: வீதிச்சட்டம், குற்றவியல் சட்டம் என்பன.
- ✓ எல்லா சட்டங்களுக்கும் தண்டனைகள் உள்ளன.
- ✓ சட்டம் எல்லோருக்கும் பொதுவானது

23. தண்டனைகள் என்றால் என்ன?

- ✓ தண்டனைகள் என்பது ஒருவர் சட்டத்தினை மீறும் போது நீதிமன்றத்தினால் அவருக்கு எதிராக விதிக்கப்படும் வரையறுக்கப்பட்ட ஆணையாகும்.

24. சட்டத்தைப் பின்பற்றுவதால் கிடைக்கும் நன்மைகள் எவை?



- ✓ சட்டத்தை மதிக்கின்ற சமூகம் உருவாகும்
- ✓ அமைதியான் சமூகச் சூழல் உருவாகும்
- ✓ மக்கள் சட்டத்தின முன் சமமாக மதிக்கப்படுவர்

25. பழக்கவழக்கம் என்றால் என்ன?

- ✓ எம்மால் பின்பற்றப்படுகின்ற செயல்களாகும். இச் செயல்கள் கால சூழ்நிலைக்கேற்ப நாம் நடந்துகொள்ளும் விதத்தின் மூலம் இருபக்க விளைவுகளை ஏற்படுத்தும். அது சமூகத்தின் பார்வையில் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமையலாம். உதாரணம்: மதச் செயற்பாடுகள். பெற்றோரையும், ஆசிரியர்களையும் மதித்தல், நாகரீகமாகப் பேசுதல்

26. மரபுகளைப் பின்பற்றுவதால் எமக்கு ஏற்படும் நன்மைகள் 4 கூறுக.

- ✓ பல் கலாச்சார புரிந்துணர்வு ஏற்படும்
- ✓ அமைதியான சூழல் ஏற்படும்
- ✓ பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்
- ✓ ஒவ்வொருவருக்கிடையிலும் அன்பும் நம்பிக்கையும் ஏற்படும்

27. இயற்கை வளங்களுக்கு உதாரணம் தருக.



- ✓ சூரிய வெளிச்சம்
- ✓ காற்று
- ✓ நீர்
- ✓ காடுகள்
- ✓ வனவிலங்குகள் மலைகள்

28. மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட வளங்களுக்கு உதாரணம் தருக.



- ✓ மரப் பொருட்கள்
- ✓ கண்ணாடிப் பொருட்கள்
- ✓ பீங்கான் பொருட்கள்
- ✓ ஓடு, செங்கல்

www.lkedu.lk

29. வளங்களின் வீண்விரயத்தைத் தவிர்ப்பதற்கு, பாடசாலை மாணவன் என்ற வகையில் உங்களால் பங்களிப்புச் செய்யக் கூடிய முறைகள்.

வளம்	வீண்விரயத்தை தவிர்க்க உங்களால் முடியுமானவைகள்
நீர்	தேவையான அளவுக்கு நீர்க் குழாயை திறத்தல் நீர்க்குழாயை பாவித்த பிறகு நன்றாக மூடி விடல் கழுவுவதற்கு நீரை எடுக்கும் போது பாத்திரத்தைப் பாவித்தல்
மின்சாரம்	பாவிக்கப்படாத சந்தர்ப்பத்தில் மின் உபகரணங்களில் மின் இணைப்பைத் துண்டித்து விடல் மின் அழுத்தி பாவிக்கும் போது முடியுமானவரை ஒரே தடவையில் உடுப்புகளை அழுத்துதல் செயற்திறன் கூடிய மின் குமிழ்களைப் பாவித்தல்
மேசை கதிரை போன்ற பாடசாலை உபகரணங்கள்	துருப்பிடிக்காமல் இருக்க நிறப் பூச்சுக்களைப் பூசுதல் நீரில் நனையாது, ஈரலிப்பு ஏற்படாவண்ணம் பாதுகாத்தல்

30. வளங்களின் வீண்விரயத்தைத் தடுப்பதால் ஏற்படும் நன்மைகள் எவை?

- ✓ பணம் மீதப்படல்
- ✓ எதிர்கால சந்ததிக்கு அவர்களின் தேவையை நிறைவேற்றுவதற்காக வளங்களைச் சேமித்தல்
- ✓ சூழலுக்கு ஏற்படும் இழப்புகளைக் கட்டுப்படுத்தல்

31. பொதுச் சொத்து என்றால் என்ன?

- ✓ அனைத்துப் பிரசைகளுடைய பங்களிப்பில் உருவாக்கப்பட்டதும், அனைத்துப் பிரசைகளுக்கும் பொதுப் பயன்பாட்டைப் பெறக் கூடியதுமான சேவை நிலையங்களும் அவற்றுக்குரிய உபகரணங்களும் பொதுச் சொத்துகளாகும்.

32. பொதுச் சொத்துக்களின் தன்மைகள் எவை?

- ✓ மக்களின் நலனையும் மக்களுக்காகக் சேவை செய்வதையும் நோக்காகக் கொண்டு செயற்படுதல்
- ✓ இலாப நோக்கம் கருதாது அரசாங்கத்தால் வழங்கப்படுதல்
- ✓ பொதுவாக அனைவராலும் பாவிக்க முடியுமாக இருத்தல்



33. பொதுச் சொத்துக்களுக்கு உதாரணம் தருக.

- ✓ பஸ் வண்டிகள், பஸ் தரிப்பிடம், புகையிரத நிலையங்கள்
- ✓ விளையாட்டு மைதானங்கள், நூலகங்கள்

34. பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதால் ஏற்படும் பயன்கள் எவை?

- ✓ மக்களுக்குத் தேவையான சேவைகளைச் சிறப்பாக வழங்க முடியும்
- ✓ புதுப்பித்தலுக்கும் நிர்வகித்தலுக்குமான செலவு மீதப்படுத்தப்படுவதால் அந்தப் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்த முடியும்
- ✓ சிறந்த வாழ்க்கை அமைப்பைப் பெறத் தேவையான வசதிகளை முன்னேற்ற முடியும்
- ✓ அவற்றை எதிர்கால சந்ததிக்கும் பயன்படுத்தக் கூடியதாக பாதுகாக்க முடியும்

www.ikeduk

35. பொதுச் சொத்துகளைப் பாதுகாப்பதற்கு பின்பற்றக் கூடிய வழிவகைகள் எவை?

- ✓ பொதுச் சொத்துகளை பாதுகாப்பது எம் எல்லோருடைய பொறுப்பும் கடமையும் என்ற அடிப்படையில் செயற்படுதல்
- ✓ பொதுச் சொத்துகளைத் தவறான முறையில் பயன்படுத்துவதிலிருந்து தவிர்ந்திருத்தல்
- ✓ பயன்படுத்தும் போது உடைதல், சிதைவடைவதிலிருந்து பாதுகாத்தல்
- ✓ பொதுச் சொத்துக்களின் முக்கியத்துவத்தை ஏனையவர்களுக்கு தெரியப்படுத்தல்
- ✓ ஏனையவர்களுக்கு உபயோகிப்பதற்கு சந்தரப்பம் வழங்குதல்
- ✓ பொதுச்சொத்துக்களை தனிப்பட்ட முறையில் கையாளாமல் இருத்தல்

- ❖ என்பன எம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் எமது **சூழலாகும்.** கடல், நீர் வீழ்ச்சி, நதிகள், வன விலங்குகள், வளிக்கோலம் இயற்கையாக வளர்ந்துள்ள மரங்கள் இயற்கைச் சூழலுக்குரியனவாகும்.
- ❖ இவை இயற்கையின் கொடைகளாகும் அவை மனிதனின் தலையீடுகள் இன்றி உருவானவைகள்.
- ❖ மனிதனின் தலையீடின்றி இன்றி இயற்கையாகவே உருவான சூழல் **பௌதீகச் சூழலாகும்.**
- ❖ மனிதனும் சூழலின் ஒரு அங்கமாகும்
- ❖ மனித தலையீட்டுடன் நிர்மாணிக்கப்பட்டவை ஆக்கப்பட்ட சூழலுக்குரியனவாகும்.

36. சூழல் பகுதிகளும் மாசடைதலுக்கான காரணமும்

சூழல் பகுதி	மாசடைதலுக்கான காரணம்
நீர்	கழிவுப் பொருட்கள் நீரில் கலத்தல் பயிர்ச் செய்கைக்கு அதிக இரசாயனப் பசளை பாவித்தல் கிருமி நாசினிப் பாவனை
நிலம்	கழிவுப் பொருட்கள் முறையற்ற விதத்தில் வெளியேற்றுதல் பயிர்ச்செய்கைக்கு இரசாயனப் பசளை பாவித்தல் கிருமி நாசினிப் பாவனை காடுகளை அழித்தல்
வளி மண்டலம்	தொழிற்சாவைகளிலிருந்து வெளியாகும் புகை வாகனங்களிலிருந்து வெளியாகும் புகை
ஒலி	ஒலி பெருக்கியிலிருந்து வெளியாகும் அதிக சத்தம் வாகனத்தின் ஊதுகுழல் சத்தம் வெடிப்புக்களால் ஏற்படும் சத்தம்







37. ஒரு சிறந்த பிரசை என்ற வகையில் சூழலைப் பாதுகாக்க பங்களிப்புச் செய்யக் கூடிய வழிவகைகள்

- ✓ சூழல் தொடர்பாக விழிப்பாக இருத்தல்
- ✓ கழிவுப் பொருட்கள் நீரில் கலத்தலைத் தடுத்தல்
- ✓ நீர்த் தேக்கங்களைச் சுத்தமாக வைத்திருக்க உதவியாயிருத்தல்
- ✓ நிலத்தில் திட்டமிடப்படாமல் கழிவுப் பொருட்களை அகற்றுவதிலிருந்து தவிர்ந்திருத்தல்
- ✓ உக்கிப் போகின்ற கழிவுப் பொருட்களை இயற்கைப் பசளைக்காகப் பயன்படுத்துதல்

www.kcdu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk